Deccan Chronicle

Dated: 08.09.2024

# VVPAT in all booths: CEO

**Chennai:** Voter Verifiable Paper Audit Trail or VVPAT, as the facility to keep a verified paper record is known popularly, would be made available in every electronic voting machine (EVM) used for the coming Lok Sabha elections, chief election officer Sathyabrata Sahoo said on Wednesday. Hitherto VVPAT was made available on select booths in the various elections and there had been a demand from various political organisations, expressing skepticism over the EVMS, to provide the facility in all the booths. (Bureau)

Deccan Chronicle

Dated: 08.02.2024

## EC allots name to Pawar's party

New Delhi: The Election Commission on Wednesday allotted 'Nationalist Congress Party-Sharadchandra Pawar' as the party name for the group led by Sharad Pawar. The order by the poll authority came a day after it gave the Nationalist Congress Party name and the "clock" election symbol to the group led by Ajit Pawar, who had walked away with a majority NCP MLAs in the Maharashtra assembly in July last year. The Sharad Pawar group had suggested three names — Nationalist Congress Party-Sharadchandra Pawar, Nationalist Congress Party — Sharadrao Pawar and Nationalist Congress Party-Sharad Pawar — to the Commission.



# EC allots new name to Sharad camp for RS polls

BHAGWAN PARAB
MUMBAI, FEB. 7

The Election Commission on Wednesday sanctioned a new name to the Sharad Pawar faction as "Nationalist Congress Party-Sharadchandra Pawar" as the one-time option for the Rajya Sabha elections.

However, the poll body is yet to allot a symbol to the Sharad Pawar-led faction.

The EC on Tuesday had recognised the faction led by Maharashtra deputy chief minister Ajit Pawar as the real NCP, allotting it the party name and "clock" symbol. The poll agency had asked the Sharad Pawar camp to choose a new name and symbol for the upcoming Rajya Sabha elections for six seats in Maharashtra. They were asked by the poll body to submit their options by Wednesday.

Ajit Pawar had broken from his uncle's side in July last year to align with the BJP and was sworn in as Maharashtra Deputy Chief Minister. He has 53 MLAs and only 12 have sided with Sharad Pawar.

## Ajit camp files caveat in SC

DC CORRESPONDENT
NEW DELHI, FEB. 7

The Ajit Pawar faction on Wednesday filed a caveat in the Supreme Court seeking an opportunity to be heard if the Sharad Pawar group moves before it challenging an Election Commission order recognising the party led by the Maharashtra deputy chief minister as the real Nationalist Congress Party (NCP).

The caveat filed through advocate Abhikalp Pratap Singh seeks to ensure that no ex-parte order is passed against the Ajit Pawar faction if the other group moves the top court.

On Tuesday, the Election Commission (EC) announced that the Ajit faction is the real NCP, in a major setback to Sharad Pawar, party founder and uncle of Maharashtra deputy chief minister Ajit Pawar.

The Times of India
Dated: 08.02.2024

# Cops: Burglars walked away with demo EVM mistaking it for briefcase

Priyanka.Kakodkar
@timesgroup.com

**Mumbai**: A demo EVM was stolen from a strongroom in Pune's Saswad on Monday morning, leading to the Election Commission writing to Maharashtra chief secretary Nitin Kareer directing the suspension of three sub-district officials. Two 21-year-old men were arrested on Wednesday and the EVM recovered.

Although it was a demo EVM, the theft has raised concerns about security of voting machines ahead of the Lok Sabha polls.

While officials emphasised the EVM was meant for training and awareness purposes, state chief electoral officer Shrikant Deshpande said, "This is a serious matter and EC has taken strong note of it."

The two arrested suspects – Shivaji Bandgar and Ajinkya Salunke – have confessed to the crime. A third suspect seen in the CCTV footage is yet to be apprehended.

Police said the three men entered the office mistaking it for an old Wada and stole the EVM thinking it was a briefcase. Not knowing what to do with it, they dumped it.

The EVM was found intact from a shed in a farm belonging to Bandgar. The two were produced before a court, which ordered their remand till Jan 12. "Bandgar is a criminal with cases of attempt to murder, molestation and rioting, while Salunke does not have any criminal antecedents," SP Pankaj Deshmukh said.

*(With inputs from Gitesh Shelke in Pune)*

The Times of India
Dated: 08.02.2024

# Sharad Pawar bloc allotted 'NCP-SCP' name for RS polls

**New Delhi:** A day after the **Sharad Pawar** bloc lost the NCP name and poll symbol to the group led by Maharashtra



deputy chief minister Ajit Pawar, the Election Commission allowed the former to use the name 'Nationalist Congress Party-Sharadchandra Pawar' as a one-time option for the upcoming Rajya Sabha polls, **reports Bharti Jain.**

Sources in the poll panel said the new name — the group's first preference, the others being Nationalist Congress Party-Sharadrao Pawar and NCP-Sharad Pawar — was okayed for the limited purpose of biennial polls to six Rajya Sabha seats from Maharashtra, due to be notified on Thursday. Having a party name will help the Sharad Pawar bloc to comply with Rule 39AA of Conduct of Election Rules, 1961, which allows authorised agents of parties to verify to whom an elector, who is a member of a party, has cast his vote.

▶ **Party, EC exchanges, P 18**

# Ex-adviser to EC: Some exchanges take place between party and EC

▶ **From P 1**

For registration as a political party, the **Sharad Pawar** group will have to follow the process and conditions laid down in Section 29A of the Representation of the People Act as well as EC guidelines in this regard. Once floated, a party must apply to EC for registration – along with documents like the party Constitution, list of office bearers, and affidavits of 100 members including officer bearers, etc – within 30 days. Former senior adviser to EC S K Mendiratta said there is usually some back and forth exchanges between the party and EC on getting the documentation right.

After the EC finds the application in order, the poll



body, as per its guidelines, asks the applicant party to issue a public notice (through newspaper advertisements) and invites objections to the proposed party name over a 30-day period. However, there have been relaxations of this 30-day window, with EC having reduced it to seven days for assembly polls held during Covid pandemic. It needs to be seen if EC will repeat such a relaxation, that too for a single party, as it may like to reserve this option for extraordinary and unprecedented situations.

EC is expected to announce polls to the Lok Sabha and four state assemblies by early March.

The Hindu (Tamil)

Dated: 08.02.2024

மாவட்ட அதிகாரிகள், காவல்துறையினருடன்

# இந்திய தேர்தல் ஆணைய அதிகாரிகள் 2-ம் நாளாக ஆய்வு

● சென்னை

அனைத்து மாநிலங்களிலும் தேர்தல் முன்னேற்பாடுகள் குறித்து தேர்தல் ஆணைய அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

அந்த வகையில், தமிழகத்தில் ஆய்வு செய்வதற்காக, இந்திய தேர்தல் ஆணையத்தின் துணை தேர்தல் ஆணையர் அஜய் பாது, தேர்தல் ஆணைய முதன்மை செயலாளர் மல்லே மாலிக் ஆகியோர் நேற்று முன்தினம் டெல்லியில் இருந்து சென்னை வந்தனர்.

முதலில், தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாஹூ மற்றும் தேர்தல் துறை அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினர். அதன்பின் பிற்பகலில் காவல்துறை, சுங்கத்துறை, வருமான வரித்துறை, வருவாய் புலனாய்வுத் துறை, போதைப் பொருள் கடத்தல் தடுப்புப் பிரிவு, மத்திய ரிசர்வ் படை, ரயில்வே பாதுகாப்புப்படை, மத்திய தொழில் பாதுகாப்புப் படை உள்ளிட்டவற்றின் மாநில பொறுப்பு அதிகாரிகளுடன் தேர்தல் பணிகள், முன்னேற்பாடுகள் குறித்து ஆய்வு நடத்தினர்.

தொடர்ந்து, நேற்று காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை, தமிழகத்தில் உள்ள மாவட்ட தேர்தல் அதிகாரிகள், மாநகர காவல் ஆணையர்கள், மாவட்ட எஸ்.பி.க்களுடன் தலைமைச் செயலகத்தில் இருந்தபடியே காணொலி மூலம் ஆலோசனை நடத்தினர். ஆலோசனை முடிந்த பின்னர் அவர்கள் டெல்லி புறப்பட்டுச் சென்றனர்.

இதையடுத்து, செய்தியாளர்களிடம் தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாஹூ கூறியதாவது: இந்திய துணை தேர்தல் ஆணையர் அஜய் பாது மற்றும் இந்திய தேர்தல் ஆணைய முதன்மை செயலாளர் மலேய் மாலிக் ஆகியோர் நாங்கள் எந்த அளவுக்கு தேர்தல் நடத்த தயாராக இருக்கிறோம் என்பது குறித்து கடந்த 2 நாட்களாக ஆய்வு செய்தனர். அப்போது நாங்கள் தேர்தலை நடத்த தயாராக உள்ளோம் என தெரிவித்துள்ளோம் என்றார்.

The review on poll preparedness of General Elections to Lok Sabha, 2024 with Collectors & Police official through Video conference.

Daily Thanthi, Dated: 08.02.2024




தமிழகத்தில் நாடாளுமன்ற தேர்தல் ஏற்பாடுகள் குறித்து இந்திய தேர்தல் ஆணையத்தின் துணை கமிஷனர் அஜய்பாது காணொலி காட்சி மூலம் மாவட்ட கலெக்டர்களுடன் ஆலோசனை நடத்திய போது எடுத்த படம். அருகில் தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு, தேர்தல் ஆணையத்தின் முதன்மை செயலாளர் மலய்மாலிக், சென்னை மாவட்ட தேர்தல் அதிகாரி டாக்டர் ராதாகிருஷ்ணன், போலீஸ் கமிஷனர்கள் சந்தீப்ராய் ரத்தோர்(சென்னை), சங்கர் (ஆவடி), அமல்ராஜ்(தாம்பரம்) உள்ளனர்.

The poll preparedness of GELS, 2024 in TN with the official of Chennai DEO, commissioner of police reviewed the Election preparations.

Daily Thanthi

Dated: 08.02.2024

**கலெக்டர்கள், போலீஸ் சூப்பிரண்டுகளுடன் ஆலோசனை**

**பண பட்டுவாடாவை தடுக்க தீவிர கண்காணிப்பு**

# தமிழகத்தில் தேர்தல் ஏற்பாடுகள் தயார்

## தலைமை தேர்தல் அதிகாரி பேட்டி

சென்னை, பிப்.8-
தமிழகத்தில் நாடாளுமன்ற தேர்தலை நடத்த தயாராக இருப்பதாகவும், விதிமுறை மீறல், பண பட்டுவாடாவை தடுக்க தீவிர கண்காணிப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுஇருப்பதாகவும் தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு தெரிவித்தார்.

### கலெக்டர்களுடன் ஆலோசனை

தமிழகத்தில் நாடாளுமன்ற தேர்தல் தயார் நிலை குறித்து ஆய்வு செய்வதற்காக இந்திய துணை தேர்தல் கமிஷனர் அஜய் பாது மற்றும் இந்திய தேர்தல் கமிஷனின் முதன்மை செயலாளர் மலேய் மாலிக் ஆகியோர் சென்னைக்கு வந்தனர். சென்னை தலைமைச் செயலகத்தில் கடந்த 2 நாட்களாக ஆய்வு கூட்டம் நடத்தப்பட்டது. நேற்று முன்தினம் தமிழக தேர்தல் அதிகாரிகள், மத்திய மற்றும் மாநில அமலாக்க முகமைகளுடன் ஆலோசனை நடத்தினர்.

அதைத்தொடர்ந்து நேற்றும் ஆய்வு கூட்டம் நடைபெற்றது. மாவட்ட கலெக்டர்கள், போலீஸ் சூப்பிரண்டுகள் காணொலி காட்சி மூலம் இந்த ஆய்வு கூட்டத்தில் பங்கேற்றனர். தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு மற்றும் தேர்தல் அதிகாரிகள், சென்னை மாநகராட்சி கமிஷனர் டாக்டர் ராதாகிருஷ்ணன் மற்றும் சென்னை, ஆவடி, தாம்பரம் போலீஸ் கமிஷனர்கள் நேரடியாக கலந்து கொண்டனர்.

புதுச்சேரி தலைமை தேர்தல் அதிகாரி ஜவகர், புதுச்சேரி டி.ஐ.ஜி. ஆகியோரும் நேற்று நடந்த கூட்டத்தில் பங்கேற்றனர். புதுச்சேரியில் மேற்கொள்ளப்பட்டு வரும் நாடாளுமன்ற தேர்தல் ஏற்பாடுகள், பாதுகாப்பு நடவடிக்கை தொடர்பாக அவர்கள் எடுத்துரைத்தனர்.

### எதுபற்றி ஆய்வு?

நாடாளுமன்ற தேர்தலை நியாயமாகவும், சுதந்திரமாகவும் நடத்துவதற்கான ஏற்பாடுகள், வாக்குச்சாவடி மையங்கள், வாக்கு எண்ணிக்கை மையங்கள் ஆகியவற்றுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள், பதற்றம் நிறைந்த வாக்குச் சாவடிகளுக்கு கூடுதல் பாதுகாப்பு வழங்குதல், வெப்கேமராக்கள் மூலம் ஓட்டுப்பதிவை கண்காணிப்பது பற்றியும் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

ஆவணங்கள் இல்லாமல் பணம் எடுத்துச்செல்வதை தடுப்பது, பண பட்டுவாடாவை தடுப்பது, தேர்தல் விதிமுறை மீறல்களை கண்டறிந்து நடவடிக்கை எடுக்க தீவிர கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வது பற்றியும் ஆலோசிக்கப்பட்டது.

### நாங்கள் தயார்

நேற்று காலை 10 மணிக்கு தொடங்கிய ஆய்வு கூட்டம் மாலை 6 மணி வரை நீடித்தது. ஆய்வு கூட்டம் நிறைவடைந்த பிறகு தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு நிருபர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:-

தமிழகத்தில் உள்ள நாடாளுமன்ற தேர்தல் தயார் நிலை குறித்து கடந்த 2 நாட்களாக இந்திய துணை தேர்தல் கமிஷனர் அஜய் பாது மற்றும் இந்திய தேர்தல் கமிஷனின் முதன்மை செயலாளர் மலேய் மாலிக் ஆகியோர் ஆய்வு மேற்கொண்டனர். எந்த அளவில் நாங்கள் தயாராக இருக்கிறோம்? என்பது பற்றி ஆய்வு செய்தனர். தேர்தல் நடத்த நாங்கள் தயார் என்று அவர்களிடம் தெரிவித்துள்ளோம்.

வாக்குப்பதிவின்போது ஓட்டுப்பதிவு எந்திரங்கள் 100 சதவீதம் தேவை என்றால், 130 சதவீத அளவில் வாக்குப்பதிவு எந்திரங்களை வைத்திருக்க வேண்டும். அந்த அளவில் தமிழகத்தில் வாக்குப்பதிவு எந்திரங்கள் உள்ளன. ஒவ்வொரு வாக்குப்பதிவு எந்திரத்துடனும் விவிபாட் எந்திரம் இணைக்கப்படும். அதன் மூலம் ஒவ்வொரு வாக்காளரும் ஒப்புகை சீட்டைப் பார்த்து அவர்களின் வாக்கை உறுதி செய்துகொள்ள முடியும்.

### கட்சிகளுடன் ஆலோசனை

போலீசார் தரப்பில் சட்டம்-ஒழுங்கு பராமரிப்பு மற்றும் அந்தந்த பகுதிகளில் நிலவும் பிரச்சினைகள் பற்றி ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. பதற்றமான அல்லது பிரச்சினைக்குரிய வாக்குச் சாவடிகளைப் பற்றி ஆய்வு செய்வதற்கு இன்னும் கால அவகாசம் உள்ளது. ஏனென்றால் வேட்பாளர் பட்டியல் இறுதி செய்யப்பட்ட பிறகு சூழ்நிலைகள் மாறக்கூடும். எனவே அங்கு நிலவும் தற்போதைய நிலை குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

தேர்தல் தேதி அறிவிப்பை இந்திய தேர்தல் கமிஷன் வெளியிடும். அதற்கு காத்திருக்க வேண்டும். இந்திய தலைமை தேர்தல் கமிஷனர் தமிழகத்துக்கு ஆய்வுக்காக வரும்போது அரசியல் கட்சிகளுடன் ஆலோசனை மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

The CEO, TN Announced that Elections Preparations are ready in Tamil Nadu. The consultation with collectors and police officials for money laundring monitoring during Elections.